மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
21.11.2022 திங்கட்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## காணி மோசடியில் ஈடுபட்டிருந்தால் உடனடியாக குழு ஒன்றை அமைத்து விசாரணை செய்யவும்

### ஜனாதிபதியிடம் சாணக்கியன் வேண்டுகோள்

பிள்ளையானின் ஊழல் மோசடிகளை கண்டறிய விசேட ஆணைக்குழு ஒன்றினை நியமிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று(செவ்வாய்கிழமை) கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், “நேற்றைய தினம் நான் சபையிலே இல்லாத போது என்னுடைய பெயரினை பயன்படுத்தி என்னுடைய சக நாடாளுமன்ற உறுப்பினர் சில கருத்துக்களை சொல்லியிருந்தார். எனவே அதுகுறித்த சில தெளிவுபடுத்தல்கள்.


எனக்கு என்னுடைய தாயும் தந்தையும் வைத்த பெயர் சாணக்கியன் இராகுல் இராஜபுத்திரன் ராசமாணிக்கம். அதுபற்றி அவருக்கு ஏதேனும் குழப்பம் இருந்தால் அவர் அதனைபற்றி பேசலாம்.

இரண்டாவதாக காணி அபகரிப்பு பற்றி ஒருவிடயம் சொல்லியிருந்தார் என்னுடைய பெயரினை பயன்படுத்தி. காணி அபகரிப்பினை

02

## 15 வயதில் தேசிய அடையாள அட்டையை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்

நாட்டில், 15 வயதில் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும், தவறனால் அபராதம் செலுத்த வேண்டுமென ஆட்பதிவுத் திணைக்களம் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. இந்நிலையில் குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம், உரிய வயதில் அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளாத நபர்கள், அந்த வயதை தாண்டி அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பங்களில் அவரிடமிருந்து, 2,500 ரூபா அபராதம் விதிக்கப்படும். கல்விப் பொதுத் தராதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு வருடமும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டாலும் ஐம்பது சத வீதமான பாடசாலைகள் தமது மாணவர்களின் விண்ணப்பங்கள் அனுப்புவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ஆசிரியர்களின் ஆடைகளுக்கும் கல்வி அமைச்சுக்கும் தொடர்பில்லை - சுசில்

ஆசிரியர்களின் ஆடை மாற்றத்திற்கும் கல்வி அமைச்சுக்கும் தொடர்பில்லை. கொவிட் தொற்று பரவல் காலத்தில் அரச சேவையாளர்களின் ஆடை தொடர்பில் வெளியிட்ட சுற்று நிருபத்தை மீள் திருத்தம் செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (21) எதிரணியின் சுயாதீன குழு பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர ஆசிரியர்களின் ஆடை விவகாரம் தொடர்பில் முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர குறிப்பிட்டதாவது, ஆசிரியர்களுக்கு வேறு ஆடைகளில் பாடசாலைகளுக்கு வருவதற்கு அரச சார்பற்ற தொண்டு நிறுவனத்தின் ஆலோசனைக்கு அமைய செயற்படும் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அதற்கு ஒருபோதும்

02

## நாடளாவிய ரீதியில் நாளை முதல் விசேட சுற்றிவளைப்பு

நாடளாவிய ரீதியில் நாளை (புதன்கிழமை) முதல் விசேட சுற்றிவளைப்பு நடத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதிக விலைக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காணும்வகையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் விடுமுறை காலத்தை இலக்காகக் கொண்டு இந்த சோதனைகள் இடம்பெறவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதன்படி, நாளை முதல் எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி வரை இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது. நுகர்வுக்குத் தகுதியற்ற உணவுப் பொருட்களை அதிக விலைக்கு விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்தை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இதனை தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கில் அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்ய 02 பில்லியன் ரூபாய் நிதியுதவி - சுகாதார அமைச்சர்

அத்தியாவசியமான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து இன்று (செவ்வாய்க்கிழமை) 02 பில்லியன் ரூபாய் நிதி கிடைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வோருக்கு மாத்திரம் இதுவரையில் 20 பில்லியன் ரூபாய் கடன் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

குறித்த நிலுவைத் தொகையை கட்டம் கட்டமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய மருந்துக் கொள்கையில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி

தேசிய மருந்துக் கொள்கையில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. 2005ஆம் ஆண்டு மருந்துக் கொள்கை அறிவிக்கப்பட்டு ஏறக்குறைய 15 ஆண்டுகள் கடந்துவிட்டதாகவும் தற்போதைய தேவைகளுக்கு ஏற்றவாறு கொள்கையை திருத்தியமைக்க வேண்டியதன் அவசியத்தை அரசு அங்கீகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இதற்காக சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் தேசிய மருந்துக் கொள்கையில் திருத்தம் செய்ய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல முன்வைத்த யோசனைக்கு நேற்று (திங்கட்கிழமை) கூடிய அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.







## சுதந்திர தினத்தில் பொதுமக்களுக்கு வாய்ப்பு

சுதந்திர தினத்தன்று கட்டண அறவீடுகளின்றி தேசிய பூங்காக்களை பார்வையிடுவதற்கும், கட்டணக்கழிவுடன் திரைப்படங்களை பார்க்கவும் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. அதன்படி, இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினமான எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி தேசிய பூங்காக்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் தாவரவியல் பூங்காக்கள்ஃஇடங்களை இலவசமாகப்

02

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்

அறிவாலயம்

அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.

## மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி வெற்றிடம்

**மேற்படி பதவிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கல்வி மற்றும் சமூகப்பணி செய்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமாக செயற்பட்டுவரும் அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்திற்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறன.

### எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

**அடிப்படை கல்வித் தகமை**

1. சா.த பரீட்சையில் ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி உட்பட ஆறு பாடங்களில் சித்தி
2. உ.தரத்தில் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் சிறப்பு சித்தி

**ஏனைய தகைமைகள்**

1. உளவியல் அல்லது உளசமூக மேம்பாடு அல்லது சமூகவியல் கற்கைகளில் சான்றிதழ் மற்றும் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஆங்கிலத்தில் சரளமாக தொடர்பாடலை மேற்கொள்ள கூடியவராக இருத்தல் வேண்டும்.
3. கணனியில் **NVQ** மட்டம் 4 பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது கணனித்துறையில் 1 வருடத்திற்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
4. பயிற்சி வகுப்புகள் உள்ள தினங்களில் சனி ஞாயிறு விடுமுறை தினங்களிலும் வேலை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்
5.வயது 25-35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
6. மோட்டார் சைக்கிள் அல்லது ஏனைய வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
7.மட்டக்களப்பு மாவட்டத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
8.மாதாந்தம் சகல படிகளுடன் 35000ரூபா சம்பளமாக வழங்கப்படும்.

*தங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையினை **arivalayam@hotmail.fr** என்ற மின்னஞ்சலுக்கு எதிர்வரும் மார்கழி 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.*

**Founder**
**Arivalayam foundation trust**
**Pandariyaveli**
**Kokkaddicholai**
**Batticoloa**
**Srilanka**

## ஆசிரியர்களின் ஆடைகளுக்கும் கல்வி அமைச்சுக்கும் தொடர்பில்லை

இடமளிக்கப்படாது என்றும் கல்வி அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் இவ்வாரம் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சிலர் வேறு ஆடைகளில் சென்றமை தொடர்பான புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன. இந்நிலையில் ஜோசப் ஸ்டாலின் போன்றோரின் இது தொடர்பான கோரிக்கைகளை பாராளுமன்றம் அனுமதிப்பது போன்றே இருக்கின்றது.
இந்த விடயத்தில் குறித்த ஆசிரியர்கள் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கை என்ன என்று கேட்டார். இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பொது நிர்வாக அமைச்சினால் கொவிட் காலத்தில் அரச அலுவலக பணியாளர்களுக்கு எளிதான ஆடைகளை அணிந்து வரும் வகையில் சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டது.

இந்நிலையில் இந்த சுற்றுநிருபத்தை பொருத்தமான வகையில் மீள் திருத்தம் செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். அதில் அரச ஊழியர்களுக்கு என்றே கூறப்பட்டுள்ளது. ஆசிரியர்களும் அரச ஊழியர்கள் என்பதனாலேயே இந்த சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான சுற்றுநிருபத்தில் ஒழுக்கம் தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஆடைகள் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. இதனால் பொது நிருவாக அமைச்சுக்கு இது தொடர்பில் தெளிவுப்படுத்துமாறு கோரியுள்ளேன் என்றார்.

## காணி மோசடியில் ஈடுபட்டிருந்தால் உடனடியாக குழு ஒன்றை அமைத்து விசாரணை செய்யவும்

பற்றி ஏதேனும் இருந்தால் நான் ஜனாதிபதியிடம் கேட்கின்றேன். குழு ஒன்றினை நியமித்து நான் என்னிடமுள்ள ஆவணங்களை கையளிக்கின்றேன். அதனை ஆராயுங்கள். அதேபோன்று சிவநேசதுரை சந்திரகாந்தனுடைய ஆவணங்களையும் தருகின்றேன் அதனையும் நீங்கள் விசாரியுங்கள்.
மூன்றாவதாக நான் கனடாவிற்கு ஆட்கடத்தலில் ஈடுபடுவதாக குறிப்பிட்டிருந்தார். கனடாவிற்கு விசா எடுத்து எப்படி போவது என்று தெரியாது என்பதனை அவர் நிருபித்துள்ளார். கனடாவிற்கு ஆட்களை கடத்தி காசு உழைக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. ஆனால் சிவநேசதுரை சந்திரகாந்தனின் சகோதரர் என அழைக்கப்படும் அகிலகுமார் சந்திரகாந்தன் அவுஸ்ரேலியாவிற்கு ஆட்களை கடத்துவதாக சர்வதேச ஊடங்கள் செய்தி வெளியிட்டுள்ளன." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சுதந்திர தினத்தில் பொதுமக்களுக்கு வாய்ப்பு

பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. அத்துடன், அன்றைய தினம் நாடளாவிய ரீதியிலுள்ள திரையரங்குகளில் **50%** கட்டணக் கழிவுடன் திரைப்படங்களைப் பார்ப்பதற்கும் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# கண்டலடி மாவீரர் துயிலும் இல்ல துப்பரவு பணி



**க.ருத்திரன்**

தமிழ் தேசிய மாவீரர் நாள் கார்த்திகை -27 ஐ முன்னிட்டு மட்டக்களப்பு வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்ல துப்பரவு பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த 2019 ஆண்டிற்கு பின்னர் 3 வருடங்கள் கடந்த நிலையில் காடு படர்ந்து காணப்பட்ட இடங்களை சிரமதானப் பணியின் மூலம் வாகரை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்த பொதுமக்கள் துப்பரவு பணியில் ஈடுபட்டிருந்தனர். அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகள்அமைப்பிற்கும் இடம்பெற்ற இறுதி யுத்தத்தினை தொடர்ந்து ஜனவரி 23 ,2007ஆம். ஆண்டு காலப்பகுதியில் வாகரை பிரதேசம் அரச கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கிருந்த மாவீரர் துயிலும் இல்லம் அங்கிருந்து அகற்றப்பட்டது.மேற்படி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு மட்டக்களக்கு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகியோர்கள் சென்று சிரமதானப் பணியினை பார்வையிட்டதுடன் அன்றைய நாளில் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்பாட்டுக் குழுவினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது தெரிவித்ததாவது எமக்கான உரிமைகளில் இதுவும் ஒன்று எமது அரசியல் உரிமைக்காக விடுதலைக்காக போராடியவர்களை அவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமகள் உணர்வு பூர்வமாக நினைவு கூறும் இந் நிகழ்வானது எதிர்வரும் காலங்களில் எவரிடமும் அனுமதி கூறி செயல்படுத்தும் நிகழ்வாக இருக்கக் கூடாது.இது எமக்கான உரிமையாகும். எமது சுதந்திரத்தினை அரசு கட்டுப்படுத்தக் கூடாது என்றார்.
இதேபோன்று முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவிக்கும்போது இறந்தவர்களை நினைவு கூறுவது சர்வதேச விதி முறையாகும். இவ்விடயம் சர்வதேச சட்டத்தில் உள்ளது.ஆகவேதான் தங்களது இறந்த உறவுகளை கடந்த காலமாக மாவீரர் தினமாக நினைவு கூறுகிறார்கள்.அண்மைக்காலத்தில் சிலர் கார்த்திகை 27 ஆம் திகதிய மாவீரர் தின நாளை கார்த்திகை 20 ஆம் திகதியாக மாற்ற நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று அறிந்தேன்.அதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது. சிலர் இது தொடர்பாக அறிக்கை விட்டிருந்தனர். பின்னர் அது நிராகரிக்கப்பட்டது. முன்னைய ஜனாதிபதிகளான மகிந்த இராஜபக்ஷ கோட்டபாய ராஜபக்ஷ ஆகியோர்கள் நினைவேந்தல்களுக்கு தடை விதித்தனர்.பாதுகாப்பு தரப்பினர் பல்வேறு வழிகளிலும் தடை விதித்தனர்.தற்போது நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருப்பதனால் இதனை நடாத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளார். அதேபோன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் நடைபெற்றது.எனவேதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை பாராட்டுகின்றேன் என்றார்.இதன்போது 4 மாவீரர்களை ஈன்றெடுத்த 72 வயதுடைய வி.தவமணி எனும் தாயார் கருத்து தெரிவிக்கும்போது தனது கணவர் மற்றும் பிள்ளைகளை போராட்டத்தில் மூலம் இழந்துள்ளதாகவும் தான் இடியப்பம் அவித்து விற்று வாழ்க்கை நடாத்தி வருவதாகவும் ஆனால் தங்களை வைத்து பிழைப்பு நடாத்தும் செயலில் சிலர் ஈடுபட்டு வருவதாக கவலை தெரிவித்தார்.

# தீக்கிரையான குடிசை வீட்டுக்கு புதிய வீடு



**(செங்கலடி நிருபர் சுபா)**

மட்டக்களப்பு – கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சந்திவெளி பகுதியில் அன்மையில் ஏழைக்குடும்பம் ஒன்றின் குடிசை வீடு திரீரென தீக்கிரையான சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது. சந்திவெளி பாலையடித்தோனா பகுதியில் மிகவும் வறுமையில் குடிசை வீட்டில் வாழ்ந்துவந்த கணபதிப்பிள்ளை ராஜேஸ்வரி என்ற குடும்பத்தினரது குடிசையே தீப்பற்றி முற்றாக தீக்கிரையாகியுள்ளது. ஒன்றரை வயது குழந்தையுடன் மிகவும் வறுமை நிலையில் வாழ்ந்துவந்த இவர்களது நிலை மிகப்பரிதாகமானது.

இதே வேளை இவர்கள் தொடர்பாக அக் கிராம சமூக செயற்பாட்டாளர்கள், கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு அவர்களின் ஊடாக மட்டக்களப்பில் இயங்கிவரும் அகிம்சா சமூக தொண்டு நிறுவனத்தினை தொடர்புகொன்டு தீக்கிரையான குடும்பத்தியருக்கான உதவிய கோரியுள்ளனர். இது தொடர்பாக கவனம் செலுத்துவதாக தெரிவித்த அகிம்சா சமூக தொண்டு நிறுவனத்தின் தலைவர் வி.விஜயராஜா இவர்களுக்கு உதவும் நோக்கில் கனடா – ஐயப்பன் பக்கதர்களின் நிதிப்பங்களிபில் ஊடாக புதிய வீட்டை அமைப்தற்கு முன்வந்துள்ளார். சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் இவ்வீடு அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது.

இதே வேளை இவர்களுக்கான புதிய வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று இடம்பெற்றது. இந் நிகழ்வில் கோரளைப்பற்று தெற்கு – கிரான் பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபு, அகிம்சா நிறுவனத்தின் தலைவர் வி.விஜயராஜா, கிராம உத்தியோகத்தர், அதிகாரிகள், சமூகசெயற்பாட்டானர் பா.கதிசுவரன் உள்ளிட்டவர்களுடன் பலர் கலந்துகொன்டிருந்தனர். இதன் போது தமக்கு உதவிய கனடா ஐயப்பன் பக்தர்கள் உள்ளிட்ட அகிம்சா நிறுவத்தினருக்கு பாயனடைந்த குடும்பத்தினர் தமது நன்றிகளை தெரிவித்தனர்.பிரதேச செயலாளர் ராஜ்பாபு அவர்களும் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com




# ஆரையூர் அருளுக்கு சிறந்த நூல் விருது



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கலை இலக்கிய துறைக்காக தொடர்ந்தும் சேவையாற்றிவரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளம் கலைஞர்களை கௌரவித்து விருது வழங்கும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான நிகழ்வு அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்றது.

இதன் போது, சிறந்த நூற்பரிசுக்கான விருது வழங்கலில் ஆரையூர் அருள் என அழைக்கப்படும் மூத்ததம்பி அருளம்பலம் எழுதிய கூத்தியல் என்ற நூலுக்கு இவ்விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

கலை இலக்கிய செயற்பாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர், தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச ரீதியாகவும் பல விருதுகளையும், பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவரால் பல நூல்களும் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் இறையின்பாவாரம், கூத்தியல், வில்லடி போன்ற நூல்கள் முக்கியத்துவமுடையதாகும்.

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
+94 777 164 524

மணமகன் விபரம் (மணமகள் தேவை)

25300 | வே | 1975
யாழ்ப்பாணம் | இந்து
Germany | Manager
Diploma | அத்தம் (கன்னி)
179 செ.மீ

25273 | வே | 1988
மாதகல் | இந்து | Canada
Tech Account Manager
சித்திரை (துலாம்) Degree
170செ.மீ | செவ் 04

24448 | வே | 1992
இணுவில் | இந்து Sri Lanka
Tech Writer | B.eng
சதயம் (கும்பம்)
180 செ.மீ

25272 | வே | 1978
யாழ்ப்பாணம் | இந்து | Switz
Volunteer Teacher
அஸ்வினி (மேடம்)
172 செ.மீ | செவ் 01

25299 | வே | 1997
வேலணை | Newzland
Admin Staff | B.eng
ஆயிலியம் (கடகம்)
169 செ.மீ | சு +செவ் 04

25274 | வே | 1994
யாழ்நகர் | இந்து
Business | A/L
உத்தரம் (கன்னி)
157 செ.மீ

25254 | வே | 1978
மட்டக்களப்பு | Australia
Forklift Driver | Diploma
அஸ்வினி (மேடம்)
173 செ.மீ

25264 | வே | 1989
திருகோணமலை | இந்து
Senior Software Engineer
Bsc | அத்தம் (கன்னி)
173 செ.மீ | சு + செவ் 02

மணமகள் விபரம் (மணமகன் தேவை)

23341 | ஐ | 1988
கல்முனை | இந்து | Sri Lanka
Asst Accountant
Non RC | A/L
188 செ.மீ

25293 | வே | 1994
முல்லைத்தீவு | Venezuela
Development officer
Degree | மூலம் (தனுசு)
160 செ.மீ | சு + செவ் 08

25303 | வே | 1998
புங்குடுதீவு | Sri Lanka
Vocational Course
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ | செவ் 02

24199 | வே | 1990
நல்லூர் | இந்து | MBA
Junior Excutive Asst
ரோகிணி (ரிஷபம்)
155 செ.மீ | செவ் 07

25262 | வே | 1998
கொக்குவில் | இந்து | SL
Asst Project Manager
Bsc | மகம் (சிம்மம்)
157 செ.மீ | செவ் 07

24283 | வே | 1994
நெல்லியடி | இந்து | Divorced
Graduate Teacher
Bsc | ரேவதி (மீனம்)
160 செ.மீ | செவ் 12

25284 | வே | 1991
அல்வாய் | இந்து | Sri Lanka
Doctor | MBBS
பூரம் (சிம்மம்)
188 செ.மீ

23328 | வே | 1994
உடுப்பிட்டி | இந்து | SL
Lecturer
Bsc | மூலம் (தனுசு)
152 செ.மீ

since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
வழங்கும்
வரன் தேடுவோம் வாருங்கள்
ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மண-மக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்
யாழ்ப்பாணம்
செல்வமஹால் 20-11-2022
கொழும்பு
தமிழ்ச்சங்கம் 27-11-2022

இந்தியாவிலிருந்து
பிரபல ஜோதிடர்
பட்டுக்கோட்டை சுப்ரமணியன்
அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில்,
உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு



நவம்பர் 20, 21, 22
யாழ்ப்பாணத்திலும்
நவம்பர் 24, 25, 26, 27
கொழும்பிலும்
முன்பதிவு செய்ய அழையுங்கள்
074 172 4524

அருந்ததி பிரைவட் லிமிட் | +94 777 164 524
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# கேரளா கஞ்சாவினை கடத்திய சந்தேக நபர் கைது



**பாறுக் ஷிஹான்**

250 கிராம் கேரளா கஞ்சாவினை கடத்திய சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். திங்கட்கிழமை(21) இரவு விசேட அதிரடிப்படையினரின் புலனாய்வு பிரிவினரின் தகவலுக்கமைய அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் இக்கைது இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சம்மாந்துறை பொலிஸ் எல்லைக்குட்பட்ட வீரமுனை பகுதியை சேர்ந்த 52 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் மேற்குறித்த போதைப்பொருளை கடத்தி செல்வதற்காக தயாராக இருந்த வேளை சந்தேக நபர் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து 250 கிராம் பொதி செய்யப்பட்ட கேரளா கஞ்சா விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர்களான எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட் பண்டார (13443) பொலிஸ் கன்ஸ்டபிள்களான நிமேஸ் (90699) அபேரட்ன(75812) சிந்தக ( 75492 ) வாகனச்சாரதி டபிள்யு.எம் குணபால (19401) அதிகாரிகள் மற்றும் புலனாய்வு பிரிவினர் இணைந்தே இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருட்களுடன்சம்மாந்துறை பொலிஸாரிடம்விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# "கைகொடுப்போம் அறக்கட்டளையினால்" கோளாவில் பெருநாவலர் வித்தியாலயத்திற்கு உதவி



**ம.கிரிசாந்**

ஆலையடிவேம்பு கல்வி கோட்ட கமு௸திகோ௸கோளாவில் பெருநாவலர் வித்தியாலய அதிபர் திருமதி.உ.இராசநாதன் அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக "கைகொடுப்போம் அறக்கட்டளை" அவர்களின் பூரண அனுசரணையில் பாடசாலை பகுதியின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முகமாக **CCTV** இணைப்பினை நிறுவி அதிபரிடம் கையளிக்கும் நிகழ்வு (2022.11.22) இன்று செய்வாய்க்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

அண்மைக்காலமாக பாடசாலைகளில் மாணவர்களின் எதிர்காலத்தினை சவாலுக்குட்படுத்தியதாக சிறுவர் துஸ்பிரயோகங்கள், போதைவஸ்து தாக்கங்கள், பிறழ்வான நடத்தைகள் போன்ற சில சம்பவங்கள் இடம் பெற்று வருவதினை அறியக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறான சம்பவங்களை பாசாலை மட்டத்தில் குறைத்து முற்பாதுகாப்பினை ஏற்படுத்தும் முகமாக கமு௸திகோ௸கோளாவில் பெருநாவலர் வித்தியாலய அதிபரான திருமதி.உ.இராசநாதன் அவர்களினால் **CCTV** இணைப்பின் தேவையினை உணர்த்தியதற்கமைவாக, கோளாவில்-03 இல் இயங்கிக் கொண்டிருக்கின்ற "கைகொடுப்போம் அறக்கட்டளை" அவர்களின் பூரண அனுசரணையில் குறித்த உதவியானது செய்து கொடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கைகொடுப்போம் அறக்கட்டளையின்சார்பாகசெம்பன் முருகன் அவர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர், மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். இந்த கமு.திகோ.கோளாவில் பெருநாவலர் வித்தியாலயம் 1900 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு தற்போது 123 வாது ஆண்டில் காலடி எடுத்துவைக்கும்நிலையிலுள்ளதும், இதில் தரம்-01 தொடக்கம் தரம்-05 வரை சுமார் 110 மாணவர்கள் கல்விகற்றும் வருகின்றனர்.

குறித்த பாடசாலையானது அக்கரைப்பற்று பிராந்தியத்தில் தேன்றிய முதலாவது பாடசாலை என்ற தனிச்சிறப்பும் கொண்ட பாடசாலையாகும்.

# உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் திருகோணமலையில்



**( அ . அச்சுதன் )**

திருகோணமலை இந்து காலாச்சார மண்டப வளாகத்தில் நேற்று மாலை (21) ஈரோஸ் சனனாயக முன்னனியின் திருகோணமலை கிளையின் ஏற்பாட்டில் அதன் தலைவர் கதிர்.திருச்செல்வம் தலைமையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியினது உறுப்பினர்களையும் உள்ளடக்கியதான சந்திப்புக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்து. இவ் நிகழ்வில் மாவட்டத்தில் இருந்து ஏழுக்கும் அதிகமான அரசியல் கட்சி உறுப்பினர்கள் . கலந்து கொண்டிருந்தனர். முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தார்.

இதன்போது உரையாற்றிய ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் கதிர் . திருச்செல்வம் கருத்துரைக்கையில் அரச பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப் -பட்ட பத்திரிகை விளம்பரத்துக்கு அமைவாக மாவட்ட தேர்தல் எல்லை நிர்ணயத்துக்கான விண்ணப்பங்கள் 10 நாட்களில் சமர்ப்பிக்க வேண்டும் என வேண்டப்பட்டிருப்பதாகவும் இதற்கான தீர்மானம் எடுப்பதற்கு கால அவகாசம் போதாதது என தெரிவித்ததோடு இது குறித்து தீர்க்கமான தீர்மானமொன்றை எட்டும் செயன்முறையில் தமிழ் மக்களுக்கும் சாதகமான எல்லை நிர்ணய நடைமுறைக்கு அனைத்துக் கட்சியின் இணக்கப்பாடு அவசியம் என்று கருத்துரைத்தார்.

மேலும் தெரிவிக்கையில், இதற்கான காலநீடிப்பு தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருடன் தொலைபேசியில் உரையாடியும் சாதகமான பதில் கிடைக்கவில்லை அதனால் இக் கால நீடிப்பு குறித்து சில தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் பேசி இருப்பதாகவும் தெரிவித்தார்.

# சைவப்புலவர் சங்கத்தின் அறுபதாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சைவசமயம் சார்ந்த போட்டிகள்

**த.சுபேசன்**

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள்,அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த மட்ட போட்டியாளர்கள்(18-30வயது) மத்தியில் 4மாகாணங்களில் சைவ சமயம் சார்பாக போட்டிகளை நடத்தவுள்ளனர். அந்தவகையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பண்ணிசைப் போட்டி,தொண்டுபாடும் செயன்முறைப் போட்டிகள், புராண படனப் போட்டி, கதாப் பிரசங்கப் போட்டி, மிருதங்கப் போட்டி மற்றும் வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகளும், திறந்த மட்டப் போட்டிகளாக புராண படனம், கதாப் பிரசங்கம், மிருதங்கம், வில்லுப்பாட்டு மற்றும் மேடை நாடகப் போட்டிகளையும் நடத்தத் தீர்மானித்துள்ளனர். எனவே போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 30௸11௸2022 முன்பாக தமது விண்ணப்பங்களை **saivappulavarsangam1960@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது சைவப்புலவர் சி.கா. கமலநாதன், தலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், இல 610 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்எனபோட்டிஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். போட்டிகள் வடமாகாணத்தில் யா.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திலும்,மேல் மாகாணத்தில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும், கிழக்கு மாகாணத்தில் மட்.ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையிலும், மத்திய மாகாணத்தில் மத்௸இந்து சிரேஷ்ட பாடசாலையிலும் டிசம்பர் 10மற்றும் 11ம் திகதிகளில் இடம்பெறும் என அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் தெரியப்படுத்தியுள்ளது.

# கிழக்கு மாகாண இளம் கலைஞர் விருது விழாவில் எந்திரி குமணனுக்கு இரண்டு விருதுகள்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கிழக்கு மாகாண பண்டாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கலை இலக்கிய துறைக்காக தொடர்ந்தும் சேவையாற்றிவரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளம் கலைஞர்களை கௌரவித்து விருது வழங்கும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான நிகழ்வு அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்றது. இதன் போது நாட்டார் கலைக்காக காத்திரமான பங்களிப்பை வழங்கியமைக்காகவும், பல்வேறு சாதனைகள் புரிந்தமைக்காகவும் மட்டக்களப்பைச் சேர்ந்த அமரசிங்கம் குமணனிற்கு 2020 ஆம் ஆண்டிற்கான நாட்டார் கலை இளங்கலைஞர் எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூற்பரிசுக்கான விருது வழங்கலில் "வரலாற்றுத்துறை சார் இலக்கியத்தில்" – "மறக்கப்பட்ட தமிழர் சிலம்பக்கலையும் அதன் வரலாற்றும் பின்னனியும்" எனும் இவரின் நூல் தெரிவுசெய்யப்பட்டதன் அடிப்படையில் இதற்கான மற்றுமொரு விருதினையும் எந்திரி அமரசிங்கம் குமணன் பெற்றக்கொண்டுள்ளதுடன், குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா யஹம்பத் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கடந்த 2000 ஆம் ஆண்டு தொடக்கம் மருவி வரும் சிலம்பக்கலையை வளர்த்தெடுப்பதற்காக அயராது பாடுபட்டுவருவதுடன், சர்வதேச சிலம்ப சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் பாரம்பரிய சிலம்ப போட்டியில் 2021 மற்றும் 2022 இற்கான போட்டிகளில் ஆயுத வரிசை மற்றும் வெறும் கை வரிசை பிரிவுகளில் இரண்டு வருடங்களிலும்தங்கப்பதக்கங்களை பெற்றுக்கொண்டுள்ளதுடன், அதன் பிற்பாடு இவர் சர்வதேச சிலம்ப சம்மேளனத்தின் இலங்கைக்குரிய தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் சிவில் பொறியியல் மற்றும் வணிக நிர்வாக முகாமைத்துவத்தில் முதுமாணி பட்டங்களை பெற்றுள்ளதுடன், தொடர்ச்சியாக மருவி வரும் சிலம்பம், தெற்கன் களரி, வர்மக்கலை, யோகக்கலை மற்றும் பாரம்பரிய விஷ வைத்தியம் ஆகியவற்றை முறையாக கற்றுக்கொண்டுள்ளதுடன் இவ்வாறான கலையம்சங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு அவை தொடர்பாக நூல் உருவாக்கத்தினையும் மேற்கொண்டுவருவதுடன், இவர் மூத்த சிலம்பக்கலை ஆசான்களான ஆ.கணபதிப்பிள்ளை (கருணாநடக வரிசை), யூ.அந்தோனிமுத்து (துடுக்காண்டம் வரிசை), எஸ்.மைக்கல் (குறவஞ்சி வரிசை), கே.சிதம்பரம் (நாகம் பதினாறு வரிசை) ஆகியோரது சிரேஸ்ட மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தினமும் உங்கள் சுபீட்சம் பத்திரிகை பார்வையிட www.supeedsam.com இணைய தளத்திற்கு செல்லுங்கள்**

# பேராசிரியர் ஸாதியா பௌஸர் எழுதிய இரு நூல்களின் வெளியீடு

**இக்பால் அலி**

கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் மற்றும் தமிழ் வர்த்தக சங்கம் இணைந்து நடாத்தும் தென்கிழக்குப் பல்லைக்கழக தமிழ் மொழித் துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி எம். ஏ. எஸ். எப். ஸாதியா பௌஸர் எழுதிய "மலையகக் கவிதைகளில் மக்களும்" மற்றும் "மலையகக் கவிதைகளில் பெண்களும் சிறுவர்களும் "எனும் இரு நூல்களின் வெளியீடும், அவர் அண்மையில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் 27-11-2022 பி.ப. 3.00 மணிக்கு ஞாயிற்றுக்கிழமை கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர். பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மொழித் முன்னாள் தலைவர் பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான் ஆகியோர்கள் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் முதல் அரங்கில் வரவேற்புரையினை கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர். அன்பழகன் அவர்களும் வாழ்த்துரையினை கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் திரு என். எம். எம். மன்சூர் அவர்களும், தமிழ் வர்த்தக சங்கத்தின் திரு. முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன் அவர்களும் நிகழ்த்தவுள்ளனர். நூல் அறிமுகவுரையினை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை முன்னாள் தலைவர் செ. யோகராசா அவர்களும் உரையாற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில் இரண்டாவது அரங்கில் பாராட்டுரையினை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா அவர்களும் ஏற்புரையினை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் தொழித் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எம். ஏ. எஸ். எப். ஸாதியா பௌஸர் அவர்களும் நன்றியுரையினை கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் செயலாளர் ஏ. சி. எம். ரஹ்மான் ஆகியோர்கள் உரையாற்றவுள்ளனர். கண்டியில் முதல் முறையாக கண்டி தமிழ் வர்த்தக சங்கமும் கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கமும் இணைந்து இவ்விழாவை நடத்துவது என்பது ஒரு வரலாற்றுசிறப்புமிக்க விழாவாகக் குறிப்பிடலாம்.

# ஒருவர் அமரும் ஆசனத்தில் இருவர் அமர்ந்து கொண்டும், தரையில் அமர்ந்தும் கல்வியை கற்கும் அவலநிலை?

**இணைந்த கரங்கள் அமைப்பின் அம்பாறை மாவட்ட பிரதிநிதி கஜரூபன் கருத்து**



**( வி.ரி. சகாதேவராஜா)**

ஒரு மாணவர் அமர வேண்டிய ஆசனத்தில் இரு மாணவர்கள் அமர்ந்து கொண்டும் ,சில வேளைகளில் தரையில் அமர்ந்து கொண்டும் கல்வி கற்கின்ற அவல நிலை இங்கு நிலவுகின்றது. இதனை அரசியல்வாதிகள் முதல் கல்வி அதிகாரிகள் வரை சீர்தூக்கிப்பார்க்க வேண்டும். என்று இணைந்த கரங்கள் அமைப்பின் அம்பாறை மாவட்ட பிரதிநிதி லோகநாதன் கஜரூபன் கருத்து தெரிவித்தார். கண்டி மாவட்டத்திலுள்ள புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இணைந்த கரங்கள் அமைப்பினால் புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி பாடசாலையில் கல்விகற்கும் 68 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வானது சனிக்கிழமை பாடசாலையின் பிரதி அதிபர் கணேசன் லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. அவர் அங்கு மேலும் கூறுகையில்..

கண்டி மாவட்டம் கம்பளை கல்வி வலயத்தில் உள்ள புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி மாணவர்கள் அருகில் உள்ள கிராமங்களில் இருந்தும் பாடசாலைக்கு வருகை தருபவர்களாக காணப்படுவதுடன் இக் கிராமத்தில் உள்ள மக்களின் பிரதான தொழிலான தோட்டத் தொழிலையே நாளாந்தம் நம்பி இந்த மாணவர்களை பாடசாலைக்கு பெற்றோர்கள் அனுப்புகின்றனர். இணைந்த கரங்கள் இப்பணியினை இடை விடாது அவர்களது பயணத்தின் நோக்கத்தையும் மாணவச் செல்வங்களின் வலியையும் உணர்ந்து "ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்" எனும் மகுடம் வாசகத்தினை சுமந்து செல்கின்றது. இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களும் இணைந்து உதவி வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பாடசாலையில் உயர்தர விஞ்ஞான பாடத்திற்கான ஆசிரியர்கள் பற்றாக்குறையினால் கண்டி பிரதேசத்தில் இருந்து ஆசிரியர்களை வரவழைத்து பிரத்தியேக வகுப்புக்களை பாடசாலையில் நடா த்துகின்றனர். மேலும் மாணவர்களுக்கு போதிய தளபாட வசதிகள் இல்லாத காரணத்தினால் ஒருவர் அமரும் ஆசனத்தில் இருவர் அமர்ந்து கொண்டும் தரையில் இருந்து கொண்டும் தனது வகுப்பைறையில் கல்வியினை கற்கின்றனர். இதனை சம்பந்தப்பட்டவர்கள் நிவர்த்தி செய்ய வேண்டும். என்றார்.

இந்நிகழ்வில் பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ். திருஞானம், பாடசாலையின் பகுதி தலைவர்களான திருமதி.எம்.தவமலர், திருமதி. ஆர்.ஜெயகாந்தி, பேராதனை தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரியைகளான தவராசா.பரணிதா, வெ.சானுஜா, கி.மிதுளா, வி.கஜந்தரி, செ.தர்ஷிகா, சி.லக்சனா, ரா.திவ்விகா மற்றும் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள்,இணைந்த கரங்கள் உறுப்பினர்களான திரு.லோ.கஜரூபன்,திரு. எஸ். காந்தன், ஆகியோர் கலந்து கொண்டனர். இணைந்த கரங்கள் அமைப்பினரால் கஃசரஸ்வதி மத்திய கல்லூரி பாடசாலையில் தரம் 01 தொடக்கம் தரம் 11 வரை கல்விகற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இணைந்த கரங்கள் உறவுகளினால் இன்றைய தினம் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான திரு லோ. கஜரூபன் திரு. எஸ். காந்தன் ஆகியோரினால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு நாள் ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் பெரியநீலாவணை மாற்றுத்திறனாளி குடும்பத்திற்கு உதவி



**(வி.ரி சகாதேவராஜா)**

"ஒருநாள் ஒரு வேலைத் திட்டம் " என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெரியநீலாவணை சுனாமி தொடர்மாடி வீட்டுத் தொகுதியிலுள்ள மாற்றுத்திறனாளி குடும்பத்திற்கு நேற்று உதவி வழங்கப்பட்டது. கிழக்கின் சமூக செயற்பாட்டாளரும் ,காரைதீவு பிரதேச சபை தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் இத் திட்டத்தின் கீழ் நேற்று இந்த உதவிகள் வழங்கப்பட்டன. அவருடன் சமூக செயற்பாட்டாளரான வி.ரி.சகாதேவராஜாவும் சமுகமளித்திருந்தார்.

புலம்பெயர் தேசத்தில் இருக்கக்கூடிய சில தாயகப் பற்றுள்ள பரோபகாரிகளின் உதவியோடு இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நேற்று, மாற்றுத்திறனாளி அஜய் மற்றும் அவரது தாயாரான பெண் தலைமை தாங்கும் குடும்ப தலைவி திருமதி செல்வராஜா அபிதா குடும்பத்திற்கு அரிசி மாவு பருப்பு சீனி தேயிலை பிஸ்கட் பால் மா கடலைப்பருப்பு உள்ளிட்ட பல உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. தமக்கு முடியுமானால் வாழ்வாதார உதவி செய்யுமாறு குடும்பத்தலைவி அபிதா வேண்டுகோள் விடுத்தார். கோரிக்கைக்கு விரைவில் தீர்வு தரப்படும் என சமூக சேவையாளர் ஜெயசிறில் உறுதியளித்தார்.

# திருகோணமலையில் கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா



**(அ . அச்சுதன்**

திருகோணமலை திஃஇ.கி.ச ஸ்ரீ. கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மண்டபத்தில். நவம்பர் 19 திருமலை கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா நிகழ்வானது, 32வது வெற்றி வருடமாக முன்பள்ளியின் நிருவாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு தலைமை ஆசிரியை செல்வி. நடராசா ரோகினிதேவி அவர்களின் வரவேற்புடனும், திருமலை இரத்தினசிங்க பிள்ளையார் ஆலய குரு கனகபால கிஸ்னன் அவர்களின் ஆசியுரையுடனும் நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வின் கௌரவ விருந்தினராக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் திருமதி .சரன்யா சுதர்ஷன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக ,ஸ்ரீ சன்முக இந்து மகளீர் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி த.ஹரிஹரன், முன்பள்ளி வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி.சர்மிளா விக்னேஸ்வரன் ஆகியோரும். பிரதம விருந்தினராக திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வினை அலங்கரிக்கும் வண்ணமாக முன்பள்ளியின் மாணவ சிறார்களினால் வரவேற்பு,காவடி, கிராமிய,அபிநய நடனங்கள் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்வுகளும் நிகழ்த்தப்பட்டு 32 வருட நிறைவும் இவ் வருடத்துக்கான கலைவிழாவும் சிறப்பாக நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை போக்குவரத்து சபையின் நுவரெலியா பேருந்து சாரதிகள் , நடத்துனர்கள் பணிப்பகிஷ்கரிப்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

இலங்கை போக்குவரத்து சபையின் நுவரெலியா பேருந்து சாரதிகள் , நடத்துனர்கள் மற்றும் ஊழியர்கள் நேற்று (21) திங்கட்கிழமை மாலை 3 மணி முதல் தொடர்ந்து நேற்று (22) செவ்வாய்க்கிழமை பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர். நுவரெலியா தனியார் பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வெளிமடை,கதிர்காமம், பதுளை,எல்ல,பண்டாரவளை போன்ற தூர பிரதேசங்களில் இருந்து இயக்கப்படும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் நுவரெலியா பிரதான பேருந்து தரிப்பிடத்திற்குள் உள்ளே நிறுத்தப்படாமல் நுவரெலியா – பதுளை பிரதான வீதியில் பேருந்து நிறுத்துவதற்கு தனியான இடம் ஒதுக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் , இலங்கை போக்குவரத்து சபையின் சொந்தமான பேருந்துகள் பிரதான பேருந்து நிலையத்துக்குள் உச்செல்ல கூடாது எனவும் தெரிவித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நுவரெலியாவில் இயக்கப்படும் அரச பேருந்து சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து இந்த பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக நுவரெலியாவில் இருந்து இயக்கப்படும் அரச பேருந்துகள் நுவரெலியா – உடபுசல்லாவ பிரதான வீதியில் அமைந்துள்ள நுவரெலியா இலங்கை போக்குவரத்து சபையின் காரியாலயத்துக்கு அருகில் கடமைக்கு செல்லாது அரச பேருந்துகள் தரித்து நிற்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது. தமக்கான உரிய தீர்வினை பெற்றுத்தரும் வரை இப்பணிபகிஸ்கரிப்பு தொடரும் என ஊழியர்கள் தெரிவித்தனர். இப்பணிபகிஸ்கரிப்பு காரணமாக பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் பெரும் மற்றும் மாதாந்த அரச பேருந்து பருவச் சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் சிரமத் திற் குள் ளாகியுள் ளமை குறிப்பிட்டத்தக்கது.

# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டு கழகம் சம்பியனாக தெரிவு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 2022 ம் ஆண்டுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டு கழகம் மற்றும் மட்டக்களப்பு எவர் சைன் விளையாட்டு கழகம் என்பன இறுதிப்பலப்பரீட்சையில் தெரிவாகியுள்ளது.

இதன் போது 3 ஃ 2 எனும் கணக்கில் குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டு கழகம் முதலிடத்தைப் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளது. சிவானந்தா விளையாட்டு கழகத்தின் 50 வருட நிறைவை முன்னிட்டு கழகத்தின் தலைவர் கே.யோகராஜா தலைமையில் சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட 6 பேரை கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த 9 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றி குறித்த சுற்றுப்போட்டியில் களமாடியிருந்ததுடன், இதற்கு இணையாக கடினப்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியும் நிகழ்த்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வயல் வரம்புகளில் உணவுப்பயிர்ச் செய்கை வேலைத்திட்டம்

**வி.சுகிர்தகுமார்**

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் வயல் வரம்புகளில் உணவுப்பயிர்ச்செய்கையினை முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இன்றும் விவசாயிகளுக்கு பயிர் விதைகள் வழங்கி வைக்கப்பட்டன. ஆலையடிவேம்பு பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ரி.பிரபாகரன் மற்றும் எஸ்.குமுததாஸ் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவுகுட்பட்ட விவசாயிகளுக்கான பயிர் விதைகள் வழங்கல் மற்றும் பயிர்விதைகள் நடுகை நிகழ்வுகளில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் கலந்து கொண்டு திட்டத்தை திட்டத்தை ஆரம்பித்து வைத்ததுடன் அக்கரைப்பற்று கிழக்கு விவசாய போதானாசிரியர் எம்.எச்.எம்.சஜாத் கலந்து கொண்டு பயிர் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி வைத்தார்.

தேசிய உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ் வயல் வரம்புகளில் உணவுப்பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும் முகமாக நடைபெற்ற நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள் வழங்கி வைக்கட்டதுடன் பயிர்செய்கையின் விதைகள் நடும் நிகழ்வும் இத்தியடி பிரதேச வயல் நிலங்களில் இடம்பெற்றது. நிகழ்வில் நாவற்காடு கமக்காரர் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# மன்னார் மாவட்டத்துக்கு புதிய உதவித் தேர்தல் ஆணையாளர் நியமனம்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்திற்கு புதிய உதவித் தேர்தல் ஆணையாளராக திரு. வேலாயுதம் சிவராசா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். மன்னார் மாவட்ட செயலகத்தில் உதவி மாவட்டச் செயலாளராக கடமையாற்றி வந்த திரு.வேலாயுதம் சிவராசா அவர்கள் மன்னார் மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் கடந்த திங்கள்கிழமை (14.11.2022) கொழும்பில் தனது நியமனக் கடிதத்தை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து மன்னாரில் மன்னார் மாவட்டத்திற்கான புதிய உதவித் தேர்தல் ஆணையாளர் பதவியை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் அவர்களின் முன்னிலையில் திங்கள்கிழமை (21.11.2022) தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வரணியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் வரணி மத்திய கல்லூரியன் பழைய மாணவருமாவார். இவர் 2000ம் ஆண்டு அரசாங்க உத்தியோகத்தராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து வடமாகாண சமூக சேவை திணைக்களத்தில் உத்தியோகத்தராக கடமையாற்றியுள்ளார்.

பின் 2019ம் ஆண்டு முதல் இவர் மன்னார் மாவட்ட செயலகத்தில் உதவி மாவட்ட செயலாளராக கடமையாற்றி வந்த நிலையில் தற்பொழுது திங்கள் கிழமை (21.11.2022) முதல் இவர் மன்னார் மாவட்டத்துக்கு புதிய உதவித் தேர்தல் ஆணையாளராக தனது கடமையை பொறுப்பெற்றுள்ளார்.

# ‘இளம் கலைச்சுரபி’ றெமோண்டோ செல்வராஜ் குலாஸ் விருது

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட செயலகமும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரனையில் புதன்கிழமை (16.11.2022) அன்று மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திருமதி அ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடாத்திய விழாவில் 2022 ஆம் ஆண்டுக்கான விருதுகள் பெற்றவர்களில் 15 கலைஞர்களில் ஒருவரான வங்காலை கலைஞர் ‘மன். இளம் கலைச்சுரபி’ றெமோண்டோ செல்வராஜ் குலாஸ் விருதை பெற்றுள்ளார்.

வங்காலை றெமோண்டோ செல்வராஜ் குலாஸ் 1986 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்.புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்திலும் பயின்றார். இவர் 2011 இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அரச சிறுவர் நாடக விழாவில் ‘மான்’ என்ற நாடகத்தினை எழுதி மேடையேற்றி நடித்ததுடன் அதில் சிறந்த துணை நடிகருக்கான விருதினைப் பெற்றுக் கொண்டார்.

மேலும் இவர் 2012 இல் வங்காலை கிராமத்தில் புனித ஆனாள் கலைக் கிராமத்தை உருவாக்கி அவ் மன்றத்தில் உள்ள கலைஞர்களைக் கொண்டு 2013 இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பெற்ற அரச சிறுவர் நாடக விழாவில் ‘தாத்தா சொன்ன கதை’ என்ற நாடகத்தினை எழுதி மேடையேற்றியதுடன் சிறந்த நெறியாளர் மேடை அமைப்பாளர் என்ற விருதுகளையும் பெற்றுக் கொண்டார். நேர முகாமைத்தவம் உட்பட்டதாக 09 விருதுகளை இவ் நாடகம் பெற்றுக்கொள்ள சிறந்த நாடக கலைஞராக விளங்கினார்.

மேலும் 2017 இல் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு மற்றும் சுற்றுல்லாத்துறை திணைக்களத்தினால் நடைபெற்ற குறுநாடக போட்டியில் ‘ஜோசேப் வாஸ்’ என்ற நாடகத்தை எழுதி மேடையேற்றி தேசிய மட்டத்தில் அந்த நாடகம் முதலிடத்தினைப் பெற்றுக் கொண்டது. மன்னார் மாவட்ட கலைபண்பாட்டு வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டி முசலி பிரதேச கலை பண்பாட்டுப் பேரவையின் பரிந்துரையின் பிரகாரம் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை இவருக்கு ‘மன். இளம் கலைச்சுரபி’ விருது வழங்கி கௌரவித்தது.

# தந்தையும் புதல்வருக்கும் விருது வழங்கி கௌரவிப்பு



எஸ்.சபேசன்

கல்முனை சேனைக்குடியிருப்பினைச் சேர்ந்த யோகாசன கலநிதியும் கலாபூசணம் தேசபந்து காளிக்குட்டி .சந்திரலிங்கம் மற்றும் அவரது புதல்வர் ச.நிதிஷன் ஆகியோர் கிழக்கு மாகாண பண்டாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான கலைஞர்களை கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். கிழக்கு மாகாணக் கலாச்சார திணைக்களம் நடாத்திய கிழக்கு மாகாணக் கலைஞர்களை கௌரவிக்கும் விழா (18) திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரி கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது பல்துறைக்க சேவையாற்றியமைக்காக யோகாசன கலாநிதி காளிக்குட்டி சந்திரலிங்கம் அவர்களுக்கு பல்துறை வித்தகர் விருதும் அவரது புதல்வர் ச.நிதிஷன் அவர்களும் கிழக்கு மாகாண நுண்கலை இளம் கலைஞர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர். ச.நிதிஷன் அவர்களுக்கு 2019 ஆண்டு தேசிய ரீதியாக கலை இளவரசன் விருது கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் தற்போது இவ்விருதும் கிடைக்கப்பெற்றுள்ளது

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.இ.எம். டபிள்யூ.ஜி.திசாநயக்க தலைமையில் இடம்பெற்ற இந்த கௌரவிப்பு விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். மேலும், ஆளுநர் செயலக செயலாளர் எல். பி.மதநாயக்க,கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம். அன்சார், பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ.மன்சூர், பிரதிப் பிரதம செயலாளர் (ஆளனி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜெலீல், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) என்.தமிழ்ச்செல்வன், பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.குலதீபன், பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் கே.கோபாலரத்தினம் உள்ளிட்ட மாகாண திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ் முஸ்லிம், சிங்கள கலைஞர்கள் இதன்போது பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து,சான்றிதழ் மற்றும் விருதுகள் போன்றவற்றை விழாவின் பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான சிறந்த பாடகர்கள், எழுத்தாளர்கள், இளம் ஊடகவியலாளர்கள், புகைப்படக் கலைஞர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. கடந்த 2020 ஆம் 2021 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுக் காரணமாக இடம்பெறாமல் தடைப்பட்டு வந்த மாகாண கலைஞர்கள் கௌரவிப்பு விழாவை 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தவேண்டும் என்று செயற்பட்டு வந்த கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட காலாச்சார உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாணதிணைக்களஉத்தியோகத்தர்கள் அனைவரின் செயற்பாடுகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விஷேட நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்த விருதுகள் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரினால் வழங்கி வைக்கப்பட்டன.

# தேசியரீதியில் சாதனை



எஸ்.சபேசன்

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் மதிவண்ணன் சியானுதன் தேசிய இலக்கியப் போட்டியில் சிறுகதை ஆக்கத்தில் தேசிய ரீதியில் மூன்றாம் இடம்பெற்று சாதனை படைத்துள்ளார். புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தேசிய இலக்கியப் போட்டியில் சிறுகதை ஆக்கத்தினை முன்வைத்து சிரேஷ்ட பிரிவில் தேசிய ரீதியில் மூன்றாம் இடம்பெற்று சாதனை படைத்ததுடன் இவருக்கான கௌரவம் கடந்த 17 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது

இச் சாதனையினைப் படைத்து பாடசாலைக்கும் வேப்பையடிக்கும் இம் மாணவன் பெருமையினை ஈட்டித்தந்துள்ளார்

# பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைப்பு



தோப்பூர் கோட்டத்திற்குட்பட்ட சல்மா மகளிர் வித்தியாலயத்தில் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு (22) அதிபர் முகம்மது முகைதீன் நசீர் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது வாசிப்பு, சித்திரம் வரைதல் மற்றும் உறுப்பமைய எழுதுதல் போன்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் ஆசிரியர்கள் சமூகத்தால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# வாழைச்சேனை ஆயிஷாவில் பசி அகற்றும் வேலைத்திட்டம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)



வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவிகளின் நலன் கருதி பாடசாலையில் உணவுப் பெட்டகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் என். சஹாப்தீன் தலைமையில் இந்நிகழ்வு செவ்வாய்க்கிழமை (22) இடம்பெற்றது. அங்கு ஒரு உணவுப் பெட்டகம் வைக்கப்பட்டுள்ளதுடன், அதில் மாணவிகளின் பசி நீக்க உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

அதில், தேவையான மாணவிகள் எடுத்துக் கொள்ளவும், இயலுமான மாணவிகள் வைத்துச் செல்லவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இத் திட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வில் அதிதிகளாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.றமீஸா, பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நஸீர், பாடசாலை பிரதி அதிபர் ஏ.ஆர்.முகைதீன் பாவா, பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.ஐ.எம்.பஸ ீல், உறுப்பினர் இம்தியாஸ், பகுதித் தலைவர் கே.ஆர்.எம்.இர்ஷாத், ஆகியோர் கலந்து கொண்டனர்.

“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com